# நான்காம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் எழுத்துகளில் குறில் நெடில் வேறுபாடுகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் சிக்கல்களைக் களைதல்

## முன்னுரை

நம் கருத்தைப் பிறர்க்கு உணர்த்த உதவும் கருவியாக மொழியாக விளங்குகிறது. மொழி இல்லையெனில் கருத்துப் பரிமாற்றம் நிகழாது. மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் இலக்கணம் உதவுகிறது. ஒரு மொழியின் இலக்கணத்தை நன்கு கற்றுக்கொண்டால், அந்த மொழியைத் திருத்தமாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் இயலும். நாம் பேசும்போதும் படிக்கும்போதும் எழுதும்போதும் பல சொற்களைப் பயன்படுத்துகிறோம். அச்சொற்கள் உண்டாவதற்குக் காரணமாக இருப்பவை எழுத்துகள். எழுத்துகளின் ஒலிவடிவமும் வரிவடிவமும் நன்கு அறிந்துகொண்டால் நம் பேச்சிலும் எழுத்திலும் பிழை நேராது.

பள்ளி மாணவர்களிடையே குறிப்பாக, தொடக்கநிலை வகுப்பு மாணவர்களிடையே எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பதில் சிக்கல் காணப்படுகிறது. குறுகிய ஓசை உடைய எழுத்துகளையும் நெடிய ஓசை உடைய எழுத்துகளையும் சரியாக ஒலிப்பதில்லை. இவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வு காண்பதற்காக இந்தச் செயலாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## மொழியின் வரிவடிமும் ஒலி வடிவமும்

நாம் பேசும் சொற்கள் எழுத்துகளால் ஆனவை. அவற்றிற்கு வரிவடிவமும் ஒலிவடிவமும் உண்டு. இவ்விரு வடிவங்களையும் தொடக்கநிலை வகுப்பு மாணவர்களுக்கு நன்கு கற்பிக்க வேண்டும். அவர்களிடையே எழுத்துகளை அடையாளம் காண்பதிலும் அவற்றை ஒலிப்பதிலும் என்னென்ன சிக்கல்கள் உண்டாகின்றன என்பதை ஆசிரியர் உற்றுநோக்கவேண்டும். இவ்வாறு செய்யும்போது, பிழைக்கான காரணங்களை ஆராய்ந்து, தகுந்த கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தித் தீர்வு காணமுடியும்.

தமிழ்மொழியில் எழுத்துகள் நான்கு வகைப்படும். அவை உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என்பன. இவற்றுள் உயிரெழுத்துகள் பிற எழுத்துகளின் துணையின்றித் தனித்து ஒலிக்கக் கூடியவை. பன்னிரு உயிரெழுத்துகளுள் குறுகிய ஓசையுடையவை அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துகளாகும். இவற்றைக் குற்றெழுத்துகள் அல்லது குறில் எழுத்துகள் என்று இலக்கணம் கூறுகிறது.

உயிரெழுத்துகளுள் நீண்டு ஒலிக்கக்கூடிய எழுத்துகள் ஏழு ஆகும். அவை ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன. இவற்றை நெட்டெழுத்துகள் அல்லது நெடில் எழுத்துகள் என்று கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மெய்யெழுத்துகள் பதினெட்டும் சேர்ந்து இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துகள் உருவாகின்றன. உயிர்க்குறில் (5), உயிர் நெடில் (7) என உயிரெழுத்துகளில் இருப்பதைப்போல், உயிர்மெய்க் குறில் (90), உயிர்மெய் நெடில் (126) என உயிர்மெய்யெழுத்துகளிலும் உண்டு. இந்த எழுத்துகளின் வரிவடிவத்தை அடையாளம் காண்பதிலும் ஒலிவடிவத்தை வேறுபடுத்தி அறிவதிலும் மாணவர்களுக்கு இடர்ப்பாடு நேர்கிறது.

எழுத்துகளுள் குறில் எழுத்துகளும் நெடில் எழுத்துகளும் வரிவடிவம், ஒலிவடிவம் என இரண்டிலும் வேறுபடுகின்றன. இத்தகைய நுண்ணிய வேறுபாட்டை மாணவர்கள் தெளிவாக அறிந்துகொள்ளாததே பிழைக்கான காரணமாக அமைகிறது.

உயிர்மெய்யெழுத்துகளில் குறிலையும் நெடிலையும் வேறுபடுத்துவதற்குரிய எழுத்து வடிவங்களை அறிமுகம் செய்து நன்கு பயிற்சி அளிக்கவேண்டும். துணையெழுத்துகளைப் பயன்படுத்தி எழுதும்போது, அவை குறிலாகவும் நெடிலாகவும் அமைவதைப் புரிந்துகொள்ளச் செய்யவேண்டும்.

எழுத்துகளை அறிமுகம் செய்யும்போதே, அவற்றிற்குரிய ஒலி, வரி வடிவங்களையும் நன்கு கவனிக்கச் செய்யவேண்டும். இதனால், ஒலிவடிவப்பிழைகளும் வரிவடிவப் பிழைகளும் நேராமல் பார்த்துக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, 'கொடு' என்பதில் முதல்எழுத்து குறுகி ஒலிப்பதையும் 'கோடு' என்பதில் முதல்எழுத்து நீண்டு ஒலிப்பதையும் உணர்த்தலாம். 'கெடு' என்பதும் 'கொடு' என்பதும் குறுகிய ஓசையுடைய எழுத்துகளே என்பதையும் உணர்த்தலாம்.

மாணவர்களிடையே குறில், நெடில் வேறுபாடு அறியாமல் பிழை நேர்வதற்குக் காரணம், எழுத்துகளை ஒலிப்பதில் ஏற்படும் குறைபாடு எனலாம். ஓர் எழுத்தை அவர்கள் எவ்வாறு ஒலிக்கிறார்களோ அவ்வாறே எழுதவும் செய்கின்றனர். தொடக்கத்திலிருந்தே குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் கருதித் தவறாக ஒலிக்கும் மாணவர்கள் தங்களுடைய எழுத்திலும் அத்தகைய பிழையையே செய்கின்றனர். இவற்றை அறிந்து, கற்பித்தல் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

## ஆய்வுத் தலைப்பு

'நான்காம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் எழுத்துகளில் குறில் நெடில் வேறுபாடுகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் சிக்கல்களைக் களைதல்' என்பது இந்த ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட தலைப்பாகும்.

## பிரச்சனையை அடையாளம் காணல்

பள்ளிப் பார்வையின்போது, நான்காம் வகுப்பு மாணவர்களிடையே படித்தல் திறன் சோதிக்கப்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் குறில், நெடில் வேறுபாடு அறியாமல் படித்தனர். எழுத்துகளைத் தனித்து ஒலித்துக்காட்டும்படி கூறியபோதும் குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் ஒலித்துக்காட்டினர். ஆகையால், குறில் நெடில் எழுத்துகளை அடையாளம் காண்பதிலும் ஒலிப்பதிலும் மாணவர்களுக்கு இடர்ப்பாடு இருப்பது கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**பிரச்சனைக்கான உத்தேச காரணங்கள்**

- எழுத்துகளுக்குரிய ஒலிவடிவமும் வரிவடிவமும் அறியாமை.
- எழுத்துப் பயிற்சி இல்லாமை.
- எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பதில் கவனமின்மை.
- படித்தல் செயலில் ஈடுபாடு காட்டாமை.
- தவறாக ஒலிக்கும்போதும் எழுதும்போதும் ஆசிரியர் சுட்டிக்காட்டாமை.

**பிரச்சனைக்கான உத்தேச தீர்வுகள்**

- ✓ எழுத்துகளின் ஒலிவடித்தையும் வரிவடிவத்தையும் நன்கு அறியச்செய்தல்.
- ✓ எழுத்துகளைப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் பன்முறை பயிற்சி அளித்தல்.
- ✓ குறில், நெடில் எழுத்துகளை அடையாளம் கண்டு ஒலிப்பதற்குத் துணைக்கருவிகளைப் பயன்படுத்திக் கற்பித்தல்.
- ✓ தவறாக ஒலிக்கும்போதும் எழுதும்போதும் உடனுக்குடன் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்துதல்.
- ✓ பாடநூலில் இடம்பெற்றுள்ள குறில், நெடில் சொற்களைத் தொகுத்து, நாள்தோறும் படிக்கச் செய்தல்.

**ஆய்வின் தேவை**

மொழியைப் பிழையில்லாமல் பேசவும் படிக்கவும் எழுதவும் வேண்டும் என்பதே இந்தச் செயலாய்வின் தேவையாகும். சிறு வகுப்பிலேயே இத்தகைய பயிற்சிகளை மேற்கொண்டால், மேல்வகுப்பிற்குச் செல்லும்போது, மாணவர்களிடையே பிழைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். எழுத்துகளுக்குரிய ஒலிப்பு முறை அறியாததால், குறில், நெடில் வேறுபாட்டை மாணவர்கள் உணராமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் தேவை உணரப்படுகிறது.

**ஆய்வு நோக்கங்கள்**

- தமிழ் எழுத்துகளுக்குரிய ஒலிவடிவம், வரிவடிவம் அறிந்துகொள்ளச் செய்தல்.
- எழுத்துகளைப் பிழையின்றிப் படிக்கவும் எழுதவும் செய்தல்.
- குறில், நெடில் வேறுபாடு அறிந்து எழுத்துகளை ஒலிக்கச் செய்தல்.
- குறில், நெடில் வேறுபாட்டால் பொருள் மாறுபடும் என்பதை உணரச் செய்தல்.

**செயலாய்வுக் களம்**

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், புளியம்பேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி இச்செயலாய்வுக்குரிய களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**ஆய்வு மாதிரிகள்**

வில்லிவாக்கம் ஒன்றியம், புளியம்பேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் பயிலும் நான்காம் வகுப்பு மாணவர்கள் 15 பேர்.

**ஆய்வு முறை**

முன்தேர்வு, கற்பித்தல் செயல்பாடுகள், பின்தேர்வு

**முன்தேர்வு**

முன்தேர்வு வினாத்தாள் இருபது மதிப்பெண்களைக் கொண்டது. நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டன.

முதல் பிரிவில் குறில், நெடில் இடம்பெற்றிருக்கும் சொற்களைப் படித்துக்காட்டும் வகையில், பத்துச் சொற்கள் கொடுக்கப்பட்டன. இரண்டாம் பிரிவில் தொடர்களில் சரியான சொற்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் குறில், நெடில் சொற்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டன.

மூன்றாம் பிரிவில் முதல் எழுத்தைக் குறிலாகவும் நெடிலாகவும் மாற்றிப் புதிய சொல் உருவாக்கும் வகையில் ஐந்து சொற்கள் கொடுக்கப்பட்டன. நான்காம் பிரிவில் படங்களுக்குரிய பெயர்களை எழுதிக்காட்டும் வகையில் குறில் அல்லது நெடில் எழுத்துகளில் தொடங்கும் பொருள்களின் படங்கள் கொடுக்கப்பட்டன.

புளியம்பேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் பயிலும் நான்காம் வகுப்பு மாணவர்கள் 20 பேருக்கு முன்தேர்வு வைக்கப்பட்டது. அவர்கள் எழுதிய விடைகள் சரிபார்க்கப்பட்டு, மதிப்பெண்கள் அளிக்கப்பட்டன. அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் விவரம் பின்வருமாறு,

**முன்தேர்வு மதிப்பெண் பட்டியல்**

| வ.எண் | பெயர் | மதிப்பெண் (20) | மதிப்பெண் % |
|---|---|---|---|
| 1 | சி. யுவராஜ் | 10 | 50 |
| 2 | ரா. அவினாஷ் | 11 | 55 |
| 3 | மோ. சுதீஷ் | 10 | 50 |
| 4 | ரா. கோகுல் | 12 | 60 |
| 5 | செ. ரோஷன் | 13 | 65 |
| 6 | சை. சையத் அன்சர் | 12 | 60 |
| 7 | ச. காட்சன் | 10 | 50 |
| 8 | ப. சந்தோஷ்குமார் | 14 | 70 |
| 9 | ஷே. முகமது சித்திக் | 13 | 65 |
| 10 | ச. ஸ்ரீமதி | 14 | 70 |
| 11 | நீ. பிரியதர்ஷினி | 13 | 65 |
| 12 | த. ஜெஸ்வின் | 12 | 60 |
| 13 | ர. ரிஜ்வான் பேகம் | 12 | 60 |
| 14 | சோ. பிரியவர்ஷினி | 14 | 70 |
| 15 | அ. கரிஷ்மா | 13 | 65 |

**முன்தேர்வுப் பகுப்பாய்வு**

முன்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 15 பேர் தேர்வு எழுதினர். அவர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்களின் பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முன்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள்


10, 11, 10, 12, 13, 12, 10, 14, 13, 14, 13, 12, 12, 14, 13

(ஏறுவரிசையில்) 10, 10, 10, 11, 12, 12, 12, 12, 13, 13, 13, 13, 14, 14, 14

| | |
|---|---|
| கூட்டுச் சராசரி | = 183/15 = 12.2 |
| இடைநிலை மதிப்பெண் | = 12 |
| முகடு | = 12, 13 |
| மதிப்பெண் வீச்சு | = 14 – 10 = 4 |

முன்தேர்வில் கூட்டுச்சராசரி, இடைநிலை, முகடு ஆகியவை குறைந்துள்ளன.

**முன்தேர்வு மதிப்பெண் வரைபடம்**



**கற்பித்தல் செயல்முறைகள்**

- குழுக்கற்றல்
- விளையாட்டுமுறை
- பயிற்சித்தாள்கள்/படவிளக்கங்கள்

**செயல்பாடு – 1**

**பயிற்சித்தாள்கள் வாயிலாகக் கற்பித்தல்**

மாணவர்கள் பெற்ற முன்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் கற்பித்தல் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டன. மாணவர்களிடையே குறில், நெடில் வேறுபாடு அறியாததற்குப் படித்தல் செயல்பாடு குறைவாக இருந்ததைக் கண்டறிய முடிந்தது.

ஆகவே, பயிற்சித்தாள்கள் வாயிலாகக் குறில் நெடில் வேறுபாடு அறியும் செயல்பாடு உருவாக்கப்பட்டது.

இதன்மூலம் சொற்களைப் படித்துக்காட்டச் செய்தும், குறில் எழுத்தில் தொடங்கும் தொடங்கும் சொற்களை நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாக மாற்றுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேற்கண்ட செயல்பாட்டிற்காக, நான்காம் வகுப்புத் தமிழ்ப்பாடநூலிலிருந்து குறில் நெடில் வேறுபாடு கொண்ட ஐம்பது சொற்கள் தொகுக்கப்பட்டன.

அவற்றை நாள்தோறும் மாணவர்களிடையே அளித்துப் படித்துக்காட்டச் செய்யுமாறு ஆசிரியரிடம் அறிவுறுத்தினார் ஆய்வாளர். இவ்வாறு செய்வதால், மாணவர்கள் எழுத்துகளின் ஒலிப்புமுறைகளை நன்கு அறிந்துகொள்வர் என வலியுறுத்தினார். இடையிடையே மாணவர்களின் படித்தல் செயல்பாட்டை ஆய்வாளரும் சோதித்துப் பார்த்துத் திருத்தினார்.

**பயிற்சித்தாள்களின் விவரம்**

**பயிற்சித்தாள் – 1**

குறிலுக்கு நெடிலையும் நெடிலுக்குக் குறிலையும் மாற்றிப் புதிய சொல் உருவாக்கும் பயிற்சியைக் கொண்டது. மாணவர்களிடையே வாய்மொழியாக விடை பெறும் செயல்பாடு விளையாட்டு முறையில் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், எழுத்து வாயிலாக எழுதிக்காட்டுமாறு ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். கொக்கு, வாடை, கண், மாடி, தொல், நடு, அவல், ஏடு முதலிய சொற்கள் பயிற்சித்தாளில் இடம்பெற்றிருந்தன.

**பயிற்சித்தாள் – 2**

சொற்பட்டியலிலிருந்து குறில் எழுத்தில் தொடங்கும் சொற்களையும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களையும் அட்டவணைப்படுத்தும் செயல்பாட்டினைக் கொண்டது. பன்னிரண்டு சொற்கள் இப்பட்டியலில் கொடுக்கப்பட்டன. அவை முட்டை, பாடம், கொடு, தடை, நீலம், பனை, பட்டு, தானம், கலை, காம்பு, ஓசை, வேலை என்பனவாகும்.

**பயிற்சித்தாள் – 3**

குறில் எழுத்தில் தொடங்கும் சொற்களுடன் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களைப் பொருத்துமாறு மூன்றாவது பயிற்சித்தாள் கொடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு மாணவரையும் சொற்களைப் படித்துக்காட்டியபின், பயிற்சித்தாளில் விடை எழுதுமாறு ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். இந்தப் பயிற்சித்தாளின்மூலம் மாணவர்களிடையே சொற்களை ஒலித்தல் பயிற்சி நடைபெற்றது. இதனால், எழுத்துகளைச் சரியாக அடையாளம்கண்டு ஒலிக்கும் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சித்தாளில் இடம்பெற்றிருந்த சொற்கள் பின்வருமாறு,

| | | | | |
|---|---|---|---|---|
| நாடு – நடு | வனம் – வானம் | பல் – பால் | குடை– கூடை | மலை– மாலை |
| தடி – தாடி | கொடை– கோடை | களை– காளை | அணி – ஆணி | கல் – கால் |

**பயிற்சித்தாள் – 4**

தொடர்களுக்குப் பொருத்தமான குறில் அல்லது நெடில் எழுத்தில் தொடங்கும் சொல்லைத் தேர்ந்தெடுக்கும் வகையில் இப்பயிற்சித்தாள் கொடுக்கப்பட்டது. இப்பயிற்சித்தாளில் பத்துத் தொடர்கள் இடம்பெற்றிருந்தன. அவையாவன,

1. பூக்களால் தொடுப்பது –––––––––––––. (மலை/ மாலை)
2. பழங்கள் நிறைந்திருப்பது ––––––––––. (குடை/ கூடை)
3. குழந்தைகள் விரும்பிக் குடிப்பது –––––––––––. (பல்/ பால்)
4. நேரத்தைக் குறிக்கும் சொல் –––––––––––––––. (கலை/ காலை)
5. குளத்தில் ––––––––––––––– படர்ந்திருக்கும். (பசி/ பாசி)
6. நிறத்தைக் குறிக்கும் சொல் –––––––––––––––. (நிலம்/ நீலம்)
7. விளையாட்டுப்பொருள்களைப் பாதுகாக்கும் பொருள்–––––(பெட்டி/பேட்டி)
8. பொருள்கள் விற்கும் இடம் ––––––––––––––––. (கடை/ காடை)
9. தாத்தா கையில் இருப்பது ––––––––––––––––. (தடி/ தாடி)
10. சிறுவர்கள் அணிவது –––––––––––––––––––. (சட்டை/ சாட்டை)

மாணவர்கள் ஒவ்வொரு தொடரையும் படித்துப் பார்த்துப் பொருள் புரிந்து கொண்டார்களா என்பதை ஆய்வாளர் சோதித்தார். பொருள் புரியாத மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார். பின்னர், சரியான சொல்லைக் கண்டறிந்து எழுதுமாறு செய்தார்.

**பயிற்சித்தாள் – 5**

எழுத்துகளைக்கொண்டே குறிலா, நெடிலா என்பதைத் தேர்ந்தெடுத்து எழுதும் பயிற்சியாக இப்பயிற்சித்தாள் இருந்தது. இதனைச் செய்யும்போது, சரியாக விடை எழுதாத மாணவர்களிடம் காரணத்தைக் கேட்டறிந்தார் ஆய்வாளர். எழுத்துகளைச் சரியாக ஒலித்துப் பழகாததே இதற்குக் காரணம் என்பதைக்

கண்டறிந்த ஆய்வாளர், ஒவ்வோர் எழுத்தையும் சரியாக ஒலித்துக்காட்ட, பன்முறை பயிற்சி அளித்தார். 'ம' என்பது குறில், 'ஐ' என்பது நெடில், 'கொ' என்பது குறில், 'கே' என்பது நெடில் என ஒலிக்கச்செய்து, எழுத்துகளை அடையாளப்படுத்தினார். இதனால், மாணவர்கள் ஆர்வத்துடன் பயிற்சியில் ஈடுபட்டனர்.

**பயிற்சித்தாள் – 6**

படங்ளையும் அவற்றின் பெயர்களையும் சரியாகப் பொருத்துவதே இந்தச் செயல்பாடாகும். இந்தச் செயல்பாட்டில், படங்களுக்குரிய பெயர்களின் முதல் எழுத்தைக்கொண்டு, குறிலா/நெடிலா எனக் கண்டறிந்து பொருத்தும் வகையில் உள்ளது. கல், கால், முட்டை, மூட்டை, மலை, மாலை ஆகிய சொற்களும் அவற்றிற்குரிய படங்களும் கொடுக்கப்பட்டன.



**பின்வரும் படத்தையும் பெயரையும் பொருத்துக.**

| வ.எண் | படம் | | பெயர் |
|---|---|---|---|
| 1 |  | | கல் |
| 2 |  | | முட்டை |
| 3 |  | | மலை |
| 4 |  | | கால் |
| 5 |  | | மூட்டை |
| 6 |  | | மாலை |

**பயிற்சித்தாள் – 7**

படங்களுக்குரிய பெயர்களை எடுத்தெழுதும் பயிற்சி, இந்தப் பயிற்சித்தாளில் இடம்பெற்றிருந்தது. படங்களுக்குரிய பெயர்கள் குறில், நெடில் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் கொடுக்கப்பட்டருந்தன. அவையாவன சோளம், குடை, கோலம், கோழி, கொடி, பெட்டி, மீன் என்பனவாகும். மாணவர்களின் எழுத்தில் குறில், நெடில் வேறுபாடு அறிந்து, பிழையாக எழுதுவதைக் களைவதற்காக இச்செயல்பாடு கொடுக்கப்பட்டது.

**பின்வரும் படங்களுக்குரிய பெயர்களை எழுதுக.**

| வ.எண் | படம் | பெயர் |
|---|---|---|
| 1 |  | |
| 2 |  | |
| 3 |  | |
| 4 |  | |
| 5 |  | |
| 6 |  | |
| 7 |  | |

**செயல்பாடு – 2**

**விளையாட்டு முறையில் குறில், நெடில் வேறுபாடு அறிதல்**

ஆய்வாளர் குறில், நெடில் வேறுபாடு கொண்ட சொற்களைத் திரட்டினார். அவற்றைப் படத்துடன் இணைத்துக் கற்பிக்க முடிவு செய்தார். சிறு சிறு துண்டுத்தாள்களில் படங்களை ஒட்டியும் அப்படங்களுக்குரிய சொற்களை வேறு துண்டுத்தாள்களில் ஒட்டியும் செயல்பாட்டை மேற்கொண்டார்.

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தார். ஒரு குழுவிடம் படங்கள் ஒட்டப்பட்ட தாள்கள் கொடுக்கப்பட்டன. மற்றொரு குழுவிடம் சொற்கள் எழுதப்பட்ட துண்டுத்தாள்கள் கொடுக்கப்பட்டன. முதல் குழு ஒரு படத்தைக் காட்டும்போது, அதற்குரிய சரியான சொல்லை இரண்டாவது குழு காட்டவேண்டும். இவ்வாறு விளையாட்டு முறையில் குறில், நெடில் வேறுபாட்டினை அறியச்செய்தார்.

**செயல்பாடு – 3**

ஆய்வாளர், படத்தொகுப்பு ஒன்று தயார் செய்தார். அதனை மாணவர்களிடம் கொடுத்து, ஒரு படத்தில் இடம்பெற்றுள்ள பொருள்களின் பெயர்களை நினைவு கூரச்செய்தார். பின்னர், அவற்றுள் குறில் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கரும்பலகையில் எழுதிக்காட்டச் செய்தார். அவர்களால் கண்டறிய முடியாத சொற்களைக் குறிப்புகள் கொடுத்துக் கண்டறியச் செய்தார். தவறாக எழுதப்பட்ட சொற்களைத் திருத்தம் செய்தார்.

**செயல்பாடு – 4**

மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் எழுத்துகள் எழுதப்பட்ட சிறு துண்டுத்தாள்கள் கொடுக்கப்பட்டன. ஆய்வாளர், செருகு அட்டை ஒன்றை மாணவர்களுக்குக் காண்பித்தார். அதில், ஒரு

சொல்லுக்குரிய முதல் எழுத்தைச் செருகு அட்டையில் சரியாகப் பொருத்தி, அச்சொல்லைப் படித்துக்காட்டச் செய்தார்.

இந்தச் செயல்பாட்டில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். சிலர் தவறாக எழுத்துகளைப் பொருத்தியபோது ஆய்வாளர், அந்தச் சொல் பொருளுடையதாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தினார். மாணவர்கள் தாங்களாகவே உருவாக்கிய சொற்களின் பொருள்களையும் கூறச்செய்தார்.

**செயல்பாடு – 5**

விடுகதை விளையாட்டின் மூலமாகக் குறில், நெடில் வேறுபாடு அறியும் செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஒரு குழுவிற்கு விடுகதைகள் எழுதப்பட்ட துண்டுத்தாள்கள் கொடுக்கப்பட்டன. மற்றொரு குழு, அந்த விடுகதைகளுக்கு விடைகள் கண்டறிந்து, கரும்பலகையில் எழுதின. குறில், நெடில் வேறுபாடு அறிந்து சரியாக எழுதிய குழுவை ஆய்வாளர் பாராட்டினார்.

விடுகதைக்கான விடையை வாய்மொழியாகச் சரியாகக் கூறினாலும், எழுதிக்காட்டும்போதும் படித்துக்காட்டும்போதும் மாணவர் சிலர் இடர்ப்பட்டனர். அவர்களுக்கு அந்தச் சொற்களைப் படித்துக்காட்டி, அவர்களையும் படிக்கச்செய்தார்.

குறில், நெடில் வேறுபாடு அறிவதற்காக மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவனவாக அமைந்திருந்தன. பயிற்சித்தாள்களைப் பிறர் உதவியின்றி எழுதுவதற்கு முதலில் தயக்கம் காட்டினர். பின்னர், செயலாய்வாளர் வழிகாட்டியபின், ஆர்வத்துடன் ஈடுபட்டு, பயிற்சிகளுக்குரிய விடைகளை எழுதிக்காட்டினர்.

**பின்தேர்வு**

குறில், நெடில் வேறுபாடு அறியும் பயிற்சிகளை மேற்கொண்ட பின்னர், மாணவர்களுக்குப் பின்தேர்வு வைக்கப்பட்டது. முன்தேர்வில் பயன்படுத்திய அதே வினாத்தாள், பின்தேர்வுக்கும் பயன்படுத்தப்பட்டது.

**பின்தேர்வு மதிப்பெண் பட்டியல்**

| வ.எண் | பெயர் | மதிப்பெண் (20) | மதிப்பெண் % |
|---|---|---|---|
| 1 | சி. யுவராஜ் | 14 | 70 |
| 2 | ரா. அவினாஷ் | 16 | 80 |
| 3 | மோ. சுதீஷ் | 15 | 75 |
| 4 | ரா. கோகுல் | 16 | 80 |
| 5 | செ. ரோஷன் | 18 | 90 |
| 6 | சை. சையத் அன்சர் | 16 | 80 |
| 7 | ச. காட்சன் | 15 | 75 |
| 8 | ப. சந்தோஷ்குமார் | 17 | 85 |
| 9 | ஷே. முகமது சித்திக் | 15 | 75 |
| 10 | ச. ஸ்ரீமதி | 17 | 85 |
| 11 | நீ. பிரியதர்ஷினி | 15 | 75 |
| 12 | த. ஜெஸ்வின் | 16 | 80 |
| 13 | ர. ரிஜ்வான் பேகம் | 16 | 80 |
| 14 | சோ. பிரியவர்ஷினி | 17 | 85 |
| 15 | அ. கரிஷ்மா | 16 | 80 |

**பின்தேர்வுப் பகுப்பாய்வு**

பின்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள் (ஏறுவரிசையில்)

14, 15, 15, 15, 15, 16, 16, 16, 16, 16, 16, 17, 17, 17, 18

கூட்டுச் சராசரி = 239/15 = 16


இடைநிலை மதிப்பெண் = 16

முகடு = 16

மதிப்பெண் வீச்சு = 18 – 14 = 4

பின்தேர்வில் கூட்டுச்சராசரி, இடைநிலை, முகடு ஆகியவை உயர்ந்துள்ளன.

**பின்தேர்வு மதிப்பெண் வரைபடம்**




**முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண் ஒப்பீடு**

| வ.எண் | பெயர் | முன்தேர்வு மதிப்பெண் (20) | பின்தேர்வு மதிப்பெண் (20) | மதிப்பெண் வேறுபாடு |
|---|---|---|---|---|
| 1 | சி. யுவராஜ் | 10 | 14 | 4 |
| 2 | ரா. அவினாஷ் | 11 | 16 | 5 |
| 3 | மோ. சுதீஷ் | 10 | 15 | 5 |
| 4 | ரா. கோகுல் | 12 | 16 | 4 |
| 5 | செ. ரோஷன் | 13 | 18 | 5 |
| 6 | சை. சையத் அன்சர் | 12 | 16 | 4 |
| 7 | ச. காட்சன் | 10 | 15 | 5 |
| 8 | ப. சந்தோஷ்குமார் | 14 | 17 | 3 |
| 9 | ஷே. முகமது சித்திக் | 13 | 15 | 2 |
| 10 | ச. ஸ்ரீமதி | 14 | 17 | 3 |
| 11 | நீ. பிரியதர்ஷினி | 13 | 15 | 2 |
| 12 | த. ஜெஸ்வின் | 12 | 16 | 4 |
| 13 | ர. ரிஜ்வான் பேகம் | 12 | 16 | 4 |
| 14 | சோ. பிரியவர்ஷினி | 14 | 17 | 3 |
| 15 | அ. கரிஷ்மா | 13 | 16 | 3 |


**முன்தேர்வு, பின்தேர்வு ஒப்பீட்டுப் பகுப்பாய்வு**

| | |
|---|---|
| முன்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள் (ஏறுவரிசையில்)<br>10, 10, 10, 11, 12, 12, 12, 12, 13, 13, 13, 13, 14, 14, 14<br>கூட்டுச் சராசரி = 183/15 = 12.2<br>இடைநிலை மதிப்பெண் = 12<br>முகடு = 12, 13<br>மதிப்பெண் வீச்சு = 14 – 10 = 4<br>முன்தேர்வில் கூட்டுச்சராசரி, இடைநிலை, முகடு ஆகியவை குறைந்துள்ளன. | பின்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்கள் (ஏறுவரிசையில்)<br>14, 15, 15, 15, 15, 16, 16, 16, 16, 16, 16, 17, 17, 17, 18<br>கூட்டுச் சராசரி = 239/15 = 16<br>இடைநிலை மதிப்பெண் = 16<br>முகடு = 16<br>மதிப்பெண் வீச்சு = 18 – 14 = 4<br>பின்தேர்வில் கூட்டுச்சராசரி, இடைநிலை, முகடு ஆகியவை உயர்ந்துள்ளன. |

**முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண் சராசரி**





**முன்தேர்வு, பின்தேர்வு ஒப்பீட்டு வரைபடம்**




முன்தேர்வில் மாணவ, மாணவியர் பெற்ற மதிப்பெண்ணின் மொத்த சதவீதம் 43% இருந்தது. பின்தேர்வில் 57% சதவீதமாக உயர்ந்திருந்தது.

**முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண் சதவீதம்**




**தீர்வுகள்**

- குறில், நெடில் வேறுபாடு அறிவதில் மாணவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், நான்காம் வகுப்பு மாணவர்கள் பதினைந்து பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.
- மாணவர்கள் முன்தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண் 183/300 ஆகும்.
- மாணவர்கள் பின்தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண் 239/300 ஆகும்.
- முன்தேர்வைவிடப் பின்தேர்வில் மாணவர்களின் மதிப்பெண் அளவு உயர்ந்திருந்தது.
- முன்தேர்வில் 43% இருந்த மதிப்பெண் சதவீதம், பின்தேர்வில் 57% ஆக அதிகரித்திருந்தது.

- முன்தேர்வில் குறைந்த அளவு மதிப்பெண் 10. அதிக அளவு மதிப்பெண் 14. பின்தேர்வில் குறைந்த அளவு 14. அதிக அளவு 18. மாணவர்களுள் சிலரைத் தவிர, பலர் குறில், நெடில் வேறுபாடு அறிந்திருந்தனர் என்பதை முன்தேர்வு, பின்தேர்வு மதிப்பெண்கள் உணர்த்தின.

**பரிந்துரைகள்**

- நான்காம் வகுப்பு மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய கற்றல் விளைவுகளுள் ஒன்று, மொழியின் வரிவடிவம், ஒலிவடிவம் அறிந்திருத்தலாகும். ஆகவே, இந்தச் செயலாய்வானது குறில், நெடில் வேறுபாடு அறிவதன்மூலம் எழுத்துகளின் ஒலிவடிவம், வரிவடிவம் ஆகியவற்றிற்கு முதன்மை அளிக்கிறது.
- நான்காம் வகுப்புக்கு மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயலாய்வினை உயர்தொடக்கநிலை வகுப்புகளுக்கும் மேற்கொள்ளலாம்.
- மாணவர்கள் படிக்கும்போது தவறாக ஒலித்தல், எழுதும்போது பிழையாக எழுதுதல் ஆகியவற்றைக் களைவதற்கு இந்தச் செயல்பாடு உதவும்.
- குறில், நெடில் வேறுபாடு அறிவதற்காக இங்குக் கொடுக்கப்பட்ட செயல்பாடுகள், பயிற்சித்தாள்கள் மட்டுமின்றி, வேறு எளிய செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். ஆய்வாளர்களின் ஆர்வம், விருப்பம் சார்ந்து பயிற்சித்தாள்களைப் புதிதாக உருவாக்கிக் கொள்ளலாம்.

**முடிவுரை**

நான்காம் வகுப்பு மாணவர்களிடையே குறில், நெடில் வேறுபாடு அறிவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயலாய்வு, நல்ல பயனைத் தந்தது. விளையாட்டு முறையிலும் குழுச் செயல்பாடுகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். இத்தகைய செயலாய்வுக்காகக் கூடுதல் பயிற்சிகளை மேற்கொண்டால், மாணவர்களின் முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களிடையே அதிக வித்தியாசம் ஏற்படும்.

**பின்னிணைப்பு – 1**

**செயலாய்வு – முன்தேர்வு/ பின்தேர்வு வினாத்தாள்**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**திருவூர் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.**

**ஆய்வாளர்**
**இரா. பொன்மணி,**
**விரிவுரையாளர்,**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**திருவூர்– 602 025. திருவள்ளூர் மாவட்டம்.**

-----------------------------------------------------------

**நான்காம் வகுப்பு மாணவர்களுக்குக் குறில் நெடில் வேறுபாடுகளை அறிந்து கொள்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல்**

**காலம்: 60 நிமிடம்** **மதிப்பெண்: 20**

**முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாள்**

1. **கீழ்க்காணும் சொற்களைப் படித்துக்காட்டுக.** **1 X 5 = 5**

| | |
|---|---|
| 1) துவரை | 6) மெரினா |
| 2) சொற்புதிர் | 7) தேசமடி |
| 3) கோடு | 8) மாசு |
| 4) பூவிழி | 9) நெகிழி |
| 5) நிலத்தடி | 10) நோய்நொடி |

2. **கீழ்க்காணும் தொடர்களில் குறில், நெடில் வேறுபாடறிந்து நிரப்புக. 1 X 5 = 5**

   1) செல்வி ----------------------- படித்தாள். (படம், பாடம்)
   2) கண்ணன் நாள்தோறும் ---------யில் திருக்குறள் படிக்கிறான் (கலை, காலை)
   3) இசையுடன் பாடுவது -------------. (பட்டு, பாட்டு)
   4) முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்த வள்ளல் --------. (பரி, பாரி)
   5) சுவரில் அடிப்பது ----------------. (அணி, ஆணி)

3. **கீழ்க்காணும் சொற்களின் முதலெழுத்தைக் குறிலாகவும் நெடிலாகவும் மாற்றுக.** **1 X 5 = 5**

1) கொடி – ----------------
2) தொடு – ----------------
3) மலை – ----------------
4) பால் – ----------------
5) ஆறு – ----------------

4. **கீழ்க்காணும் படங்களுக்குரிய பெயர்களை எழுதுக.** **1 X 5 = 5**

1.  --------------------------------

2.  ---------------

3.  --------------------------------

4.  --------------------------------

5.  --------------------------------

**பின்னிணைப்பு – 2**

## நிழற்படங்கள்

|  |  |
| --- | --- |
| வகுப்பாசிரியருடன் ஆய்வாளர் | முன்தேர்வு |

|  |  |
| --- | --- |
| குறில், நெடில் அடையாளம் காணல் | |

| | |
|---|---|
|  |  |
| **குறில், நெடில் சொற்களைப் படித்தல்** | |
|  | |







**குறில், நெடில் வேறுபாடு அறிதல்**





**தொடர்களைப் படித்தல்**

|  |  |
|---|---|
| பயிற்சிச் செயல்பாடுகள் | |



**பின்னிணைப்பு – 3**

## பயிற்சித்தாள்கள்

### பயிற்சித்தாள் – 1

**முதல் எழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்குக.**

| வ.எண் | சொற்கள் | |
|---|---|---|
| 1 | **கொக்கு** | நாக்கு |
| 2 | வாடை | |
| 3 | கண் | |
| 4 | மாடி | |
| 5 | தொல் | |
| 6 | நடு | |
| 7 | அவல் | |
| 8 | ஏரி | |

### பயிற்சித்தாள் – 2

**கொடுக்கப்பட்ட சொற்களை அட்டவணைப்படுத்துக.**

**முட்டை, பாடம், கொடு, தடை, நிலம், ஆசை, ஈகை தானம், கலை, காம்பு, ஓசை, வேலை, பனை, பட்டு**

| வ.எண் | குறில் | நெடில் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

## பயிற்சித்தாள் – 3

## குறில் ஓசைக்கேற்ற நெடில் ஓசைச் சொற்களைப் பொருத்துக.

| வ.எண் | குறில் | – | நெடில் |
|---|---|---|---|
| 1 | நடு | | பால் |
| 2 | வனம் | | கூடை |
| 3 | பல் | | நாடு |
| 4 | குடை | | வானம் |
| 5 | மலை | | கோடை |
| 6 | தடி | | காளை |
| 7 | கொடை | | மாலை |
| 8 | களை | | தாடி |
| 9 | அணி | | கால் |
| 10 | கல் | | ஆணி |

## பயிற்சித்தாள் – 4

## சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

1) பூக்களால் தொடுப்பது ––––––––––––––––. (மலை, மாலை)
2) பழங்கள் நிறைந்திருப்பது –––––––––––––. (குடை, கூடை)
3) குழந்தைகள் விரும்பிக் குடிப்பது ––––––––. (பல், பால்)
4) நேரத்தைக் குறிக்கும் சொல் –––––––––––. (கலை, காலை)
5) குளத்தில் படர்ந்திருப்பது ––––––––––––––. (பசி, பாசி)
6) நிறத்தைக் குறிக்கும் சொல் –––––––––––. (நிலம், நீலம்)
7) விளையாட்டுப் பொருள்கள் பாதுகாக்கும் பொருள்––––––. (பெட்டி, போட்டி)
8) பொருள்கள் விற்கும் இடம் ––––––––––––. (கடை, காடை)
9) தாத்தா கையில் இருப்பது –––––––––––––. (தடி, தாடி)
10) சிறுவர்கள் அணிவது –––––––––––––––. (சட்டை, சாட்டை)

## பயிற்சித்தாள் – 5

### பொருத்தமானதைக் கண்டறிக.

1) **ம** என்பது ----------- (குறில், நெடில்)
2) **ஐ** என்பது ----------- (குறில், நெடில்)
3) **ஊ** என்பது -----------(குறில், நெடில்)
4) **கொ** என்பது ----------(குறில், நெடில்)
5) **சோ** என்பது ---------- (குறில், நெடில்)
6) **ஔ** என்பது -----------(குறில், நெடில்)
7) **சூ** என்பது ----------- (குறில், நெடில்)
8) **மை** என்பது -----------(குறில், நெடில்)
9) **கே** என்பது ----------- (குறில், நெடில்)
10) **கூ** என்பது ------------(குறில், நெடில்)



## பயிற்சித்தாள் – 6

### பின்வரும் படத்தையும் பெயரையும் பொருத்துக.

| வ.எண் | படம் | | பெயர் |
|---|---|---|---|
| 1 |  | | **கல்** |
| 2 |  | | **முட்டை** |
| 3 |  | | **மலை** |
| 4 |  | | **கால்** |
| 5 |  | | **மூட்டை** |
| 6 |  | | **மாலை** |

## பயிற்சித்தாள் – 7

### பின்வரும் படங்களுக்குரிய பெயர்களை எழுதுக.

| வ.எண் | படம் | பெயர் |
|---|---|---|
| 1 |  | |
| 2 |  | |
| 3 |  | |
| 4 |  | |
| 5 |  | |
| 6 |  | |
| 7 |  | |

**பின்னிணைப்பு – 4**

## பார்வை நூல்கள்

| வ.எண். | நூற்பெயர் | நூலாசிரியர் பெயர் மற்றும் வெளியீடு |
|---|---|---|
| 1 | நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் | பேராசிரியர் வி. கணபதி<br>சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை – 14. |
| 2 | தமிழ் பயிற்றும் முறைகள் | டாக்டர் ந. சுப்புரெட்டியார்<br>மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608 001. |
| 3 | பைந்தமிழ் கற்பிக்கும முறைகள் | டாக்டர் இ.பா. வேணுகோபால்<br>சாரதா பதிப்பகம், சென்னை – 600 005. |
| 4 | நான்காம் வகுப்பு தமிழ்ப்பாடநூல் பருவம் – (1 – 3) | தமிழ்நாட்டுப் பாடநூல் மற்றும் பணிகள் கழகம், சென்னை – 600 006. |

©©©©©©©©©©